

## முடிவு பாடல்:

### ஒவ்வொரு மனிதனும்

ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
ஒவ்வொரு மனிதனும் சகோதரன்
என் சகோதரன்

1. வறுமையில் வாழ்பவன் என் நண்பன்
வறுத்தத்தில் இருப்பவன் சகோதரன் 2
அல்லல்படுபவன் என் நண்பன்
ஆபத்தில் இருப்பவன் சகோதரன் 2
காரணம் அவனும் மனிதன் 2

2. பிறகுலம் சேர்ந்தாலும் என் நண்பன்
பிறஇனம் சேர்ந்தாலும் சகோதரன் 2
பிறமொழி பேசினாலும் என் நண்பன்
பிறமதம் சார்ந்தாலும் சகோதரன் 2
காரணம் அவனும் மனிதன் 2

3. அழகை இழந்தவன் என் நண்பன்
அறிவை இழந்தவன் சகோதரன் 2
ஊனமாய் பிறந்தவன் என் நண்பன்
ஊமையாய் பிறந்தவன் சகோதரன் 2
காரணம் அவனும் மனிதன் 2

## இறுதிச் செபம்:

இறுதிச் செபத்தைச் சொல்ல மற்றொரு அதிச உறுப்பினரை அழைக்கலாம்.

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



# அதிசசிந்தனை



## கருப்பொருள்:

# பிற சமயங்களோடும் கலாச்சாரங்களோடும் உறவாடல்

## ஆரம்பப் பாடல்:

# என் தேவனே

என் தேவனே என் இறைவனே
உம்மை எந்நாளும் போற்றிடுவேன்
உம்மை எந்நாளும் பாடிடுவேன் 2

1. கண்ணிழந்தோர் பார்த்திடக் கண்டேன்
   இறையேசுவின் கருணை
   அதில் கண்டேன் 2
   விண்ணிழந்தோர் அதைப்பெறக்
   கண்டேன் 2
   இறையேசுவின் மனதை அதில் கண்டேன்

2. உடலில் ஒளி வீசிடக் கண்டேன்
   இறையேசுவின் மகிமை அதில் கண்டேன்
   2
   கடல்களிலே பெரும் அமைதி கண்டேன் 2
   இறையேசுவின் தன்மை அதில் கண்டேன்

3. எளியவரும் மகிழ்ந்திடக் கண்டேன்
   இறையேசுவின் இன்பம் அதில் கண்டேன்
   2
   ஒளிவிளக்காய் திகழ்ந்திடக் கண்டேன் 2
   இறையேசுவின் தூய்மை அதில் கண்டேன்

## தொடக்கச் செபம்:

செபம் சொல்ல அதிச
உறுப்பினர் ஒருவரை
அழைக்கலாம்

## உரையாடல்

“இயேசு கிறிஸ்துவின் ஆவி வழியாக அவரது மீட்பின் மறைபொருளில் வேறு வகையில தங்களது மீட்பு நிலையை எல்லா ஆண்களும் பெண்களும் அடைவது இந்த ஒற்றுமை மறைபொருளில் நிகழும். கிறிஸ்துவர்கள் தங்களது விசுவாசத்தில் இதனை அறிந்து கொள்ளும் வேளையில், தங்களது மீட்புக்கு காரணமாக இருப்பது இயேசு கிறிஸ்து என்பதை மற்றவர்கள் அறியாதிருப்பர். கடவுளுக்கே அறிந்த வகையில் மீட்பின் மறைபொருள் அவர்களைச் சென்று சேர்க்கிறது. புலப்படாத கிறிஸ்துவின் ஆவியின் செயல்பாட்டினால் அது நிகழ்கிறது. இதர சமயத்தைச் சேர்ந்தவர்கள் கடவுளின் அழைப்புக்கு இசைவுத் தெரிவிப்பதை அடுத்து அவர்களின் சமயத்தில் நற்செயல்கள் என கருதப்படுபவை வழி அது நிகழும். இயேசு கிறிஸ்துவை தங்களது மீட்பராக அவர்கள் அங்கீகரிக்கா விட்டாலும் அல்லது ஏற்றுக்கொள்ளா விட்டாலும், அவரில் மீட்பைப் பெறுவர்”. (cf. AG 3, 9, 11). (DP 29).

## பகிர்வுக்கான கேள்வி

1. “வேறு வகையில்” கிறிஸ்துவர்களும் மற்றவர்களும் மீட்பைப் பகிர்ந்து கொள்கின்றனர். அதே மீட்பின் மறைப்பொருளில் (மற்றவர்களுடனான எனது அனுபவம் என்ன)
2. தூய ஆவியின் புலப்படாத செயல் வழி இதர சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மீட்பின் மறைபொருள் சென்றடைகிறது. இதனால் வேறுபட்ட கலாச்சாரங்கள் மற்றும் சமயத்தினருடன் உறவு வைத்துக் கொள்வது அவசியம் என நான்/நாம் கருதுகிறோமா?

## உணர்வு

### (யோனா 4:5-9 (வாசகம் )

யோனாவோ நகரை விட்டு வெளியேறினார்; நகருக்குக் கிழக்கே போய் உட்கார்ந்து கொண்டார். பிறகு அவர் தமக்கு பந்தலை அங்கே அமைத்துக் கொண்டு, நகருக்கு நிகழப் போவதைப் பார்ப்பதற்காக அதன் நிழலில் அமர்ந்திருந்தார். கடவுளாகிய ஆண்டவரது ஏற்பாட்டின்படி ஆமணக்குச் செடி ஒன்று அங்கே முளைத்தது. அது வளர்ந்து யோனாவின் தலைக்கு நிழல் தந்து அவரது மனச்சோர்வை நீக்கியது. அந்த ஆமணக்குச் செடியைக் கண்டு யோனா மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். ஆனால் ஆண்டவரது கட்டளைப்படி மறுநாள் பொழுது விடியும் நேரத்தில் ஒரு புழு வந்து அந்த ஆமணக்குச் செடியை அரிக்கவே, செடி உலர்ந்து போயிற்று. கதிரவன் எழுந்த பின் கடவுளின் கட்டளைப்படி, கிழக்கிலிருந்து அனற்காற்று வீசிற்று. கடும் வெயில் யோனாவின் தலையைத் தாக்கவே அவருக்கு மயக்கம் உண்டாயிற்று. “வாழ்வதை விடச் சாவதே எனக்கு நல்லது” என்று அவர் சொல்லி, தமக்குச் சாவு வரவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

அப்பொழுது கடவுள் யோனாவை நோக்கி, . “ஆமணக்குச் செடியைக் குறித்து நீ இவ்வாறு சினங்கொள்வது முறையா?” என்று கேட்டார். அதற்கு யோனா, . “ஆம்,முறைதான்; செத்துப்போகும் அளவுக்கு நான் சினங் கொள்வது முறையே” என்று சொன்னார்.

ஆண்டவர் அவரை நோக்கி, அந்தச் செடி ஓர் இரவில் முளைத்தெழுந்து, மறு இரவில் முற்றும் அழிந்தது. நீ அதற்காக உழைக்கவும் இல்லை. அதை வளர்க்கவுமில்லை. அதற்கு இவ்வளவு இரக்கம் காட்டுகிறாயே! இந்த நினிவே மாநகரில் இலட்சத்து இருபதாயிரத்ததுக்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள்.

## சிறிய விளக்கம்:

படைப்பு முழுவதும் மீது கடவுளுக்கு அனைத்து உரிமையும் உண்டு என்பதை எடுத்துக் காட்டுகிறது யோனா புத்தகம். இரக்கத்தின் அன்பின் ஆண்டவராகிய கடவுள், அழிவை விட மன்னிப்பை விரும்புகிறார் என்பதை அது குறிப்பிடுகிறது. இந்த அன்பும் இரக்கமும் மிக்க இறைவன், ஒரு நாட்டிற்கோ அல்லது குறிப்பிட்ட மக்களுக்கோ சொந்தமானவரல்ல.

## சிந்தனை:

- வாசகத்தை மூன்று முறை படியுங்கள்
- நம் மனதில் ஆண்டவர் பேச விரும்புவதால், மூன்று நிமிடத்திற்கு மௌனமாக காப்போம்.
- நினிவே மக்கள் பற்றிய யோனாவின் எண்ணம் என்ன?
- இறைவாக்கினர் யோனா கற்றுக் கொண்ட பாடம் என்ன?
- மற்ற கலாச்சாரங்கள் மற்றும் சமயத்தினருடன் உறவு கொள்வதில் தனிநபர் என்ற முறையிலும் சமூகம் என்ற முறையிலும் இன்று எதிர்நோக்கும் சவால்கள் என்ன?

## செயல்:

“பிற சமயத்தைச் சேர்ந்தவர்களிடையே காணப்படும் ஆன்மீக மற்றும் தார்மீக நல்ல அம்சங்களையும் அவர்களின் சமூகத்திலும் கலாச்சாரத்திலும் காணப்படும் சிறந்த பண்புகளையும், கிறிஸ்துவ விசுவாச வாழ்வின் சாட்சியாக ஏற்றுக் கொண்டு, பாதுகாத்து, ஊக்குவிக்க அவர்களோடு விவேகமாகவும் அன்பாகவும் கலந்துரையாடலையும் ஒத்துழைப்பையும் மேற்கொள்ளும்படி தமது மக்களைத் திருச்சபை கேட்டுக் கொள்கிறது” (NA.2)

நாம் அவ்வளவு உறவு கொள்ளாத பிற சமய மற்றும் கலாச்சாரத்தைச் சேர்ந்த சகோதர–சகோதரிகளைத் தேடி சென்று உறவாடுவதற்கான

நல்லத்தொரு திட்டத்தை இந்த மாதத்தில் அதிச முன்வைக்கலாம்.